**சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.**
**முன்னிலை – திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்.பி.எல்.,**
**சார்பு நீதிபதி, கொடுமுடி.**
**2024 ம் வருடம் நவம்பர் மாதம் 4 ம் நாள் திங்கட்கிழமை**
**2055 திருவள்ளுவராண்டு ஸ்ரீ குரோதி வருடம் ஐப்பசி மாதம் 18 ம் நாள்**

**இடைநிலை மனு எண்.3/2024**
**அசல் வழக்கு எண்.227/2024**

S. வேலுசாமி ..மனுதாரர்/வாதிகள்

/ எதிர் /

P. ரவி ..எதிர்மனுதாரர்/பிரதிவாதி

04.04.2024 தேதியிட்ட இம்மனு உ.வி.மு.ச.கட்டளை 26, விதி 10(1) மற்றும் பிரிவு 151 ன்படி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டு, கடனுறுதி சீட்டில் உள்ள கைரேகை உடன் எதிர்மனுதாரரின் கைரேகையுடன் ஒப்பீடு செய்ய வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 24.10.2024 ம் தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் திரு.P.மாணிக்கம், வழக்கறிஞர் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.P.சுப்பிரமணியம் வழக்கறிஞர் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

**உத்தரவு**

கடனுறுதி சீட்டில் உள்ள கைரேகை உடன் எதிர்மனுதாரரின் கைரேகையுடன் ஒப்பீடு செய்ய வேண்டுமென்று கோரி மனுதாரர்களால்

இந்த மனு தாக்கல் செய்யப் –பட்டுள்ளது.

**2.மனு பிரமாணப் பத்திரத்தின் சுருக்கம் பின்வருமாறு:**

2.1. வாதி மேற்படி அசல் வழக்கை பிரதிவாதி எழுதி கொடுத்த தாவா கடனுறுதி சீட்டின் பேரிலான தொகையை வசூல் செய்யும் பொருட்டு தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் கடந்த 03.02.2021ம் தேதியில் ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், தொழுவம் பாளையத்தில் வைத்து மனுதாரரிடமிருந்து ரூ. 7,00,000/–தை தன்னுடைய அவசர மற்றும் தொழில் செலவுகளுக்காக வேண்டி கடனாக பெற்றுக் கொண்டுள்ளார். மேற்படி தொகைக்கு 18 % ஆண்டுவட்டி கணக்கீடு செய்து திரும்ப செலுத்துவதாக ஒப்புக் கொண்டு மனுதாரர் பெயருக்கு தாவா கடனுறுதி சீட்டை எழுதி கொடுத்ததுள்ளார். மனுதாரர், எதிர்மனுதாரரை நேரில் சந்தித்து தாவா கடனை திரும்ப செலுத்த கேட்டும் எதிர்மனுதாரர் தாவா கடன் அசலையோ, வட்டியையோ திரும்ப செலுத்த நடவடிக்கை எடுக்காததால் 25.03.2023ம் தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். எதிர்மனுதாரர் வழக்கறிவிப்பை பெற்றுக் கொண்ட போதும் கடன் தொகையை திரும்ப செலுத்தவும் இல்லை பதிலும் தரவில்லை. எதிர்மனுதாரர் தாவா அசல் கடன் தொகை ரூ. 7,00,000/– அதற்கு 03.02.2022 முதல் 03.02.2023 வரையிலான காலக்கட்டத்திற்கு 18 சதவீதம் வட்டியாக ரூ. 1,89,000/– சேர்த்து 8,89,000/– செலுத்த வேண்டி உள்ளது.

2.2. எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலமாக ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்து அதில் எதிர்மனுதாரரின் கையெழுத்து மற்றும் கைரேகை ஆகியவற்றை மோசடியாக உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மனுதாரர் முதல் விசாரணை வாக்கு மூலம் தாக்கல் செய்து தன்னை வா.சா.1 ஆக விசாரித்துக் கொண்டு ஆவணங்கள் குறியீடு செய்தபோது தாவா கடனுறுதி சீட்டு மோசடி ஆவணம் என்று ஆட்சேபணை

செய்துள்ளார். அதனால் தாவா கடனுறுதி சீட்டில் உள்ள கைரேகை நிபுணர் மூலமாக சோதனை செய்ய வேண்டி உள்ளதால் தாவா கடனுறுதி சீட்டில் உள்ள கைரேகையும் எதிர்மனுதாரர் கைரேகை உடன் ஒப்பீடு செய்ய வேண்டி உள்ளது. எதிர்மனுதாரரின் கைரேகை திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு கடனுறுதி சீட்டில் உள்ள கைரேகை உடன் எதிர்மனுதாரரின் கைரேகையுடன் ஒப்பீடு செய்ய வேண்டும் என்றும் இல்லாவிட்டால், மனுதாரர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பும் பாதிப்பும் ஏற்பட்டுவிடும். மனுவை அனுமதிக்க வேண்டும்.

**<u>3.எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிர் உரையின் சுருக்கம்:</u>**

3.1. மனு பொய்யானது, கற்பனையானது, சட்டப்படியும், சங்கதிகளின்படியும் நிலைக்கத்தல்ல. 03.02.2022 தேதியன்று பிரதிவாதி தனது அவசர செலவுகளுக்காக மனுதாரரிடமிருந்து ரூ. 7,00,000/- கடனாகப் பெற்று அதை ஆண்டுக்கு 18% வட்டியுடன் திருப்பிச் செலுத்த ஒப்புக் கொண்டதாக கூறியுள்ளது தவறானது என்றும் மனுதாரர் பலமுறை கோரிக்கை விடுத்தும், பிரதிவாதி அசல் அல்லது வட்டிக்கு எந்தத் தொகையையும் செலுத்தவில்லை என்றும் சொல்வது தவறானது என்றும் 25.03.2023 ம் தேதியிட்ட நோட்டீஸைப் பெற்று கொண்டு தொகையை செலுத்தவில்லை என்று கூறுவது தவறு என்றும் மனுதாரருக்கு ரூ.8,89,000/-ஐ எதிர்மனுதாரர் கட்ட வேண்டும் என்று கூறுவது தவறு.

3.2. 24.01.2024 தேதியிட்ட எதிர் வழக்குரையில் தெரிவித்து தாவா கடனுறுதி சீட்டில் உள்ள எதிர்மனுதாரரின் கையெழுத்து மறுத்துள்ளார். தற்போது மனுதாரர் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்து பி.வா.சா.1 முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளார். நீதிமன்றத்திற்கு பிரச்சனைக்குரிய கையெழுத்து மற்றும் கைரேகையை ஒப்புக் கொண்ட கைரேகையுடன் ஒப்பீடு செய்ய அதிகாரம் இருப்பதாகவும், ஆனால் வழக்கு

நடவடிக்கைகளை காலதாமதப்படுத்தும் நோக்கத்தோடு தாவா கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்தை வல்லுநர்களுக்கு அனுப்ப வேண்டும் என்றும் இம்மனு தாக்கல் செய்துள்ளார். தாவா கடனுறுதி சீட்டில் உள்ள கைரேகையும் எதிர்மனுதாரரிடமிருந்து திறந்த நீதிமன்றத்தில் கைரேகை பெற்று வல்லுநருக்கு அனுப்ப நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட வேண்டும் என்பது தேவையில்லாத ஒன்று. மனு அனுமதிக்கும் பட்சத்தில் எதிர்மனுதாரருக்கு மிகப்பெரிய துயரம் ஏற்படும் என்பதால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**5.<u>பிரச்சினைக்குத் தீர்வு:</u>**

மனுதாரர் மேற்படி அசல் வழக்கை எதிர்மனுதாரர் எழுதி கொடுத்த தாவா கடனுறுதி சீட்டின் பேரிலான தொகையை வசூல் செய்யும் பொருட்டு தாக்கல் செய்துள்ளதாகவும், எதிர்மனுதாரர் கடந்த 03.02.2021ம் தேதியில் ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், தொழுவம் பாளையத்தில் வைத்து மனுதாரரிடமிருந்து ரூ. 7,00,000/-தை தன்னுடைய அவசர மற்றும் தொழில் செலவுகளுக்காக வேண்டி கடனாக பெற்றுக் கொண்டு மேற்படி தொகைக்கு 18 % ஆண்டுவட்டி கணக்கீடு செய்து திரும்ப செலுத்துவதாக ஒப்புக் கொண்டு மனுதாரர் பெயருக்கு தாவா கடனுறுதி சீட்டை எழுதி கொடுத்ததாகவும், மனுதாரர், எதிர்மனுதாரரை நேரில் சந்தித்து தாவா கடனை திரும்ப செலுத்த கேட்டும் எதிர்மனுதாரர் தாவா கடன் அசலையோ, வட்டியையோ திரும்ப செலுத்த நடவடிக்கை எடுக்காததால் 25.03.2023ம் தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும் எதிர்மனுதாரர் வழக்கறிவிப்பை பெற்றுக் கொண்ட போதும் கடன் தொகையை திரும்ப செலுத்தவும் இல்லை பதிலும் தரவில்லை என்றும் எதிர்மனுதாரர் தாவா அசல் கடன் தொகை ரூ.

7,00,000/- அதற்கு 03.02.2022 முதல் 03.02.2023 வரையிலான காலக்கட்டத்திற்கு 18 சதவீதம் வட்டியாக ரூ. 1,89,000/- சேர்த்து 8,89,000/- செலுத்த வேண்டி உள்ளதாகவும் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலமாக ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்து அதில் எதிர்மனுதாரரின் கையெழுத்து மற்றும் கைரேகை ஆகியவற்றை மறுத்து அவை மோசடியாக உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளதாகவும் மனுதாரர் முதல் விசாரணை வாக்கு மூலம் தாக்கல் செய்து தன்னை வா.சா.1 ஆக விசாரித்துக் கொண்டு ஆவணங்கள் குறியீடு செய்தபோது தாவா கடனுறுதி சீட்டு மோசடி ஆவணம் என்று எதிர்மனுதாரர் ஆட்சேபணை செய்ததாகவும் அதனால் தாவா கடனுறுதி சீட்டில் உள்ள கைரேகை நிபுணர் மூலமாக சோதனை செய்ய வேண்டி உள்ளதால் தாவா கடனுறுதி சீட்டில் உள்ள கைரேகையும் எதிர்மனுதாரர் கைரேகை உடன் ஒப்பீடு செய்ய வேண்டி உள்ளதால் எதிர்மனுதாரரின் கைரேகை திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு கடனுறுதி சீட்டில் உள்ள கைரேகை உடன் எதிர்மனுதாரரின் கைரேகையுடன் ஒப்பீடு செய்யும் பொருட்டு மனுவை அனுமதிக் கவேண்டும் என வாதிடப்பட்டது.

6. எதிர்மனுதாரர் தரப்பில் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் தவறானது என்றும் தாவா கடனுறுதி சீட்டு மோசடியாக உருவாக்கப்பட்டு அதில் எதிர்மனுதாரரின் கையெழுத்து மற்றும் கைரேகை உருவாக்கப்பட்டுள்ளதாகவும் இந்த விவரம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த 24.01.2024 தேதியிட்ட எதிர் வழக்குரையில் தெரிவித்து தாவா கடனுறுதி சீட்டில் உள்ள எதிர்மனுதாரரின் கையெழுத்து மறுத்துள்ளதாகவும் தற்போது மனுதாரர் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்து பி.வா.சா.1 முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளதாகவும் நீதிமன்றத்திற்கு பிரச்சனைக்குரிய கையெழுத்து மற்றும் கைரேகையை ஒப்புக் கொண்ட கைரேகையுடன் ஒப்பீடு செய்ய அதிகாரம் இருப்பதாகவும், ஆனால் வழக்கு

நடவடிக்கைகளை காலதாமதப்படுத்தும் நோக்கத்தோடு தாவா கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்தை வல்லுநர்களுக்கு அனுப்ப வேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும் தாவா கடனுறுதி சீட்டில் உள்ள கைரேகையும் எதிர்மனுதாரரிடமிருந்து திறந்த நீதிமன்றத்தில் கைரேகை பெற்று வல்லுநருக்கு அனுப்ப நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட வேண்டும் என்பது தேவையில்லாத ஒன்று என்றும் மனு அனுமதிக்கும் பட்சத்தில் எதிர்மனுதாரருக்கு மிகப்பெரிய துயரம் ஏற்படும் என்பதால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று வாதிடப்பட்டது.

7. தாவா கடனுறுதி சீட்டில் உள்ள எதிர்மனுதாரரின் கையெழுத்து மற்றும் கைரேகையை மறுத்து தாவா கடனுறுதி சீட்டானது மனுதாரரால் மோசடியாக உருவாக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தாவா கடனுறுதி சீட்டானது உண்மையானது என்பதை பொறுத்தும் தாவா கடனுறுதி சீட்டானது எதிர்மனுதாரரால் தகுந்த மறுபயனுக்கு எழுதி கொடுக்கப்பட்டது என்பதை மனுதாரர் நிரூபிக்கும்பட்சத்தில்தான் மனுதாரருக்கு கோருரிமை கிடைக்கக்கூடும் என்றும் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் தாவா கடனுறுதி சீட்டு மோசடியானது என்றும் அதிலுள்ள கையெழுத்து மற்றும் கைரேகை மனுதாரரால் மோசடியாக உருவாக்கப்பட்டது என்று ஒரு கூற்றை முன் வைத்துள்ள நிலையில் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101 முதல் 103 வரையிலான பிரிவுகளின்படி ஒரு குறிப்பிட்ட சங்கதியை யார் முன் வைக்கிறார்களோ அவர்கள்தான் அந்த சங்கதியை நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும் ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில் தாவா கடனுறுதி சீட்டு மோசடியாக மனுதாரரால் உருவாக்கப்பட்டது என்று ஒரு கூற்றை முன் வைத்துவிட்டு அதை நிரூபிக்க எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் தாவா கடனுறுதி சீட்டை பார்வையிட்டதாகவோ அவ்வாறு பார்வையிட்ட சமயத்தில்தான் அது மோசடியாக

உருவாக்கப்பட்டது என்ற விவரம் தெரியவந்ததாக தெரிவிக்கப்படவில்லை. எனினும் மனுதாரர் அவர் கோருரிமையை நிறைவேற்றும் பொருட்டு தாவா கடனுறுதி சீட்டில் உள்ள எதிர்மனுதாரரின் கைரேகையுடன் எதிர்மனுதாரரிடமிருந்து திறந்த நீதிமன்றத்தில் கைரேகை பெறப்பட்டு அதை கைரேகை நிபுணருக்கு அனுப்பி ஒப்பீடு செய்யும் பொருட்டு நீதிமன்ற் ஆணையயர் நியமனம் செய்ய வேண்டி கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதால் மனுதாரரின் கோரிக்கையானது ஏற்புடையதாக இருப்பதால் இம்மனுவானது அனுமதிக்க போதுமான முகாந்திரம் உள்ளதாக முடிவு செய்யப்படுகிறது.

முடிவாக, இம்மனுவானது அனுமதித்து நீதிமன்ற ஆணையர் எதிர்மனுதாரரிடமிருந்து திறந்த நீதிமன்றத்தில் இருதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் மாதிரி கையொப்பங்கள் பெற்று தாவா கடனுறுதி சீட்டையும் மாதிரி கையொப்பத்தையும் சென்னை தடயவியல் அறிவியல் துறையில் உள்ள கைரேகை நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெற நீதிமன்ற ஆணையராக வழக்கறிஞர் திருமதி.K. பிரீத்தி அவர்களை நியமனம் செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுதாரர் தன்னுடைய கைரேகையை இன்றிலிருந்து ஒரு வாரத்திற்குள் நீதிமன்ற வேலை நாளில் நீதிமன்றத்தில் முன்னிலையாகி நீதிமன்ற அலுவலர் முன்னிலையில் தனது கைரேகையை பதிவு செய்து கொடுக்க வேண்டுமென்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. தாவா கடனுறுதி சீட்டையும் மாதிரி கையொப்பத்தையும் சென்னை தடயவியல் அறிவியல் துறையில் உள்ள கைரேகை நிபுணருக்கு அனுப்பி வைக்க இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. நீதிமன்ற ஆணையரின் ஊதியம் மற்றும் ஆய்வுக்கட்டணம் ஆகியவற்றிற்கு ரூ.15,000/-ஐ மனுதாரர் ஒரு வாரத்திற்குள் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டுமென்றும், தாவா கடனுறுதி சீட்டையும் மாதிரி கையொப்பத்தை மூடி முத்திரையிடப்பட்ட கவரில் நீதிமன்றத்திலிருந்து பெற்று தடயவியல் நிபுணரின்

பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை பெற்று வர வேண்டுமென்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. தடயவியல் ஆய்வக அறிக்கைக்காக வழக்கை அழைக்க 25.11.2024.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு ஒலி வடிவில் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2024 ம் வருடம் நவம்பர் மாதம் 4 ம்நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

M RAMACHANDRAN
Digitally signed by M RAMACHANDRAN
Date: 2024.11.04 17:08:10 +0530

சார்பு நீதிபதி,
கொடுமுடி.

<u>சாட்சிய சான்றாவணப் பட்டியல்</u>
(இருதரப்பிலும் .. தாக்கல் இல்லை... )

M RAMACHANDRAN
Digitally signed by M RAMACHANDRAN
Date: 2024.11.04 17:08:36 +0530

சார்பு நீதிபதி,
கொடுமுடி.